மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பொதுவாக மக்கள் தொகை, ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கை இவைகளின் அடிப்படையில் பெரிதாக இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கிற செயற்குறிப்பு அரசிடம் இப்போது இருக்கிறது. தேர்தலுக்கு வசதியாக இருக்க வேண்டும் என்ற வகையில் தான் பிரிக்கும் உத்தேசமிருக்கிறது.

திரு. மொ. பெரியசாமி : மங்களூர், நல்லூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து பெண்ணாடம் என்று புதியதாக ஒரு ஒன்றியம் அமைக்க எவ்வளவு நாட்களுக்குள் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றி குறிப்பு அமைச்சருக்கே வரவில்லை, அரசு தலைமைச் செயலகத்திற்கும் வரவில்லை, ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஆய்வில் இருக்கிறது.

திரு. செ. சிவசாமி : போகளூர் ஊராட்சி ஒன்றியம் 63 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. ஏற்கனவே அதை பிரித்து விட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று பிரித்த பிற்பாடு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு ஏகமனதாக பிரிக்கப்பட்டு, அந்த யூனியனில் உள்ள சில கிராமங்களைத் தனித்தனியாகப் பிரித்து அந்தப் பக்கத்திலிருந்து இந்தப் பக்கம் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கம் என்று போட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : போகளூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிக்கிற செயற்குறிப்பு இருக்கிறது. அதிலுள்ள சிக்கல்கள் பற்றி எழுதியனுப்பினால் அது பற்றி பரிசீலிக்கலாம்.

*வினா எண். 110—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் ஏலகிரி, ஜவ்வாது மலையில் உள்ள ஊராட்சிகளை ஒன்று சேர்த்து மலைவாழ் மக்களுக்குத் தனி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

(இ) எப்போது முதல் செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்

(ஆ) செயற்குறிப்பின்படி புதிய ஒன்றியத்தில் 20 ஊராட்சிகள் இடம் பெறும். இது இன்னும் அரசின் ஆய்வில் உள்ளது.

(இ) இக்கள்விக்கு இப்போது இடமில்லை.

1979 பிப்ரவரி 20]

[முற்பகல் 9-40]

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 9 ஒன்றியப் பகுதிகளில் இந்த மலைவாழ் மக்கள் வாழும் பகுதி அடங்கியிருக்கிறது. ஆகவே மலைவாழ் மக்களுக்கு என்று போடப்படும் பல திட்டங்களை சரிவர செயல்படுத்த முடியவில்லை. ஆகவே இதைக் கருத்திற்கொண்டு வரவிருக்கின்ற தேர்தலுக்கு முன்பாகவே தனி ஒன்றியமாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மலைவாழ் மக்களுக்கு நல்ல முறையில் பல திட்டங்கள் பயன்பட வேண்டும் என்கின்ற எண்ணத்தில் ஜமுனமருதூர் என்ற இடத்தை தலைமையிடமாக கொண்டு 20 ஊராட்சிகள் அடங்கிய இடத்தையும் சேர்த்து ஒன்றியமாக அமைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அரசு அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. இது பற்றி முடிவு எடுத்து விரைவில் ஒன்றியமாக அமைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: முன்பு கல்ராயன் மலைப் பகுதி ஒன்றியமாக இருந்தது. பின்னால் எடுக்கப்பட்டது. மீண்டும் கல்ராயன் மலைப் பகுதியை உள்ளடக்கி ஒன்றியமாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா? நடைபெறவிருக்கின்ற தேர்தல் காலத்திற்கு முன்பு இது அமைக்கப்படுமா? ஆய்வில் இருக்கின்றது என்று சொன்னால், எப்போது முடிவு எடுக்கப்படும். அதன் காலம் என்ன, எதைக் கேட்டாலும் ஆய்வில் இருக்கிறது என்று பதில் சொல்லிவிடுகிறார்கள். ஆய்வில் இருக்கிறது என்று சொன்னால், எத்தனை மாதங்களுக்குள் முடிவு எடுக்கப்படும், மூன்று மாதமா அல்லது ஆறு மாதமா அல்லது அடுத்த தேர்தல் வரும் வரையிலா என்று திட்டவட்டமாக தெரிவிக்க வேண்டுகிறேன். ஆய்வில் இருக்கின்றது என்று இங்கு பதில் சொல்லிவிடுகிறார்கள். ஆனால் நாங்கள் மக்களுக்கு இப்படிப்பட்ட பதிலை சொல்ல முடியவில்லை. ஆகவே திட்டவட்டமாக தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தேர்தலுக்கு முன்பாகவே ஆய்வு செய்யப்பட்டு முடிவு எடுக்கப்பட்டுவிடும். குறிப்பாக நமது நாட்டில் 374 ஒன்றியங்கள் இருக்கின்றன. இன்னும் அதிகமான அளவில் ஒன்றியங்களை அமைக்க வேண்டும் என்று சொல்லும்போது, இதன் எண்ணிக்கை அதிகமாகிறது. மத்திய அரசு 374 ஒன்றியங்கள்தான் இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அதிகமாக ஒன்றியங்களை அமைக்கும்போது, நிதிச் செலவும் அதிகமாகிறது. அதையும் கருத்தில் கொண்டு சிறிய சிறிய ஊராட்சிகளை எல்லாம் சேர்த்து எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு ஒன்றியமாக அமைக்க அரசு ஆய்வு செய்து வருகிறது. இதன் அடிப்படையில்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்துரு அரசின் ஆய்வில் இருக்கிறது. இதுபற்றி அரசு விரைவில் முடிவு எடுக்கும்.

[1979 பிப்ரவரி 20

திரு. சொ. ந. பழனிசாமி : தலைவர் அவர்களே, அவநாசி ஒன்றியத்தை பிரிப்பதற்கு ஏதேனும் செயற்குறிப்பு அரசினிடத்தில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : அரசினுடைய நிதிச் செலவும் அதிகமாகும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மலைவாழ் மக்களுக்காக பல நல்வாழ்வுத் திட்டங்களுக்காக மத்திய அரசு ஏராளமான திட்டங்களைத் தீட்டி அதற்காக செலவு செய்து வருகிறது. இவ்வித திட்டங்களுக்குத் தரப்படும் நிதியை பயன்படுத்தி இந்த ஒன்றியத்தை தேர்தல் நடத்துவதற்கு முன்பு அமைப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மலைவாழ் மக்களுக்காக இந்த ஒன்றியத்தை தேர்தல் வருவதற்கு முன்னால் அமைப்பதற்காக, தீவிரமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இந்த மலை வாழ் மக்களுக்காக ஜமுனமருதூரை மையமாகக் கொண்டு புதிதாக ஒன்றியம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது அங்கேயிருக்கின்ற பல பகுதிகளில் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத முறையில் இருக்கின்றன. இவைகள் எல்லாம் உத்தேச ஒன்றியத்தில் வரவிருப்பதாக சொல்லப்படுகிறது. மலைவாழ் மக்களுடைய நலனைக் கருதி, சீக்கிரமாக இந்த ஒன்றியத்தை அமைத்து, ஜமுனமருதூருக்கு இந்த ஊர்களிலிருந்தெல்லாம் போவதற்கு சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படுமா ? மேலும் இந்த ஒன்றியத்தில் கலசபாக்கம், ஆலங்காயம், செங்கம் போன்ற ஒன்றியங்களிலிருந்து சில பகுதிகள் சேர்க்கப்படும் என்று தெரிகிறது. இவைகளில் முக்கியமாக ஆலங்காயம் ஒன்றியத்தின் தலைநகரமாக ஆலங்காயம் இருக்கிறது. ஆகவே ஆலங்காயத்திலுள்ள ஊர்களை அப்படியே வைத்து விட்டு, பிற இடங்களை எல்லாம் சேர்த்து இந்த ஒன்றியத்தை விரைவில் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அமையப் போகின்ற இந்த புதிய ஒன்றியத்தில், கீழ்க்கண்ட ஒன்றியங்களிலுள்ள 20 ஊராட்சிகள் சேர்க்கப்படும். அந்த ஒன்றியங்களின் பெயர்கள், ஆலங்காயம், திருப்பத்தூர், மாதனூர், அணைக்கட்டு, கணியம்பாடி, போளூர், கலசப்பாக்கம், புதுப்பாளையம், செங்கம்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே. இது போன்ற ஒரு கேள்வி நான் கேட்டிருந்தேன், அது இப்போது இடம் பெறவில்லை, இருப்பினும் யூனியன்கள் சம்பதந்தமாக பல திட்டங்கள் போடப்பட்டிருந்தும் ஒன்றும் செயல்படாமல்

1979 பிப்ரவரி 20]

இருந்து கொண்டிருக்கிறது. சில ஒன்றியங்களில் போடப்பட்ட பல திட்டங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் எதுவும் நடைபெறாமல் இருக்கிறது. மேலும் புது ஒன்றியங்கள் அமைப்பதில் பொருளாதார சிக்கல் இருப்பதையும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை அடிப்படையாக வைத்து, அதை சாக்காக வைத்துக்கொண்டு, உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற ஒன்றிய அமைப்பு சம்பந்தமான முடிவுகள் கைவிடப்பட்டு விடுமோ என்ற அச்சம் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக மலைவாழ் மக்களின் நல்வாழ்வு திட்டம் என்பதை தனியாக திட்டமாக கருதி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியை சுருக்கமாக போடுங்கள், முன்வரிசையில் இருப்பவர்கள் திறமையாக கேள்விகளை போடக்கூடியவர்கள். தயவு செய்து சுருக்கமாக போடுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : அந்தத் திறமையைப்பற்றி எல்லோருக்கும் தெரியும், நான் சொல்ல விரும்புவது, பொருளாதாரத்தை அடிப்படையாக காட்டி, அதை ஒரு சாக்காகக் காட்டி அரசின் உத்தேசம் கைவிடப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அதைப் போக்குகின்ற வகையில், அடுத்த தேர்தல் வருவதற்கு முன்பு இந்த ஒன்றியத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, முன்வரிசையிலே உள்ளவர்கள் முறையாகக் கேள்வியைப் போடுவார்கள் என்றால், மற்றவர்கள் அப்படிப் போட மாட்டார்கள் என்று அர்த்தமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அப்படிச் சொல்லவில்லை. முன்வரிசையிலே கட்சித் தலைவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். கட்சித் தலைவர்கள் திறமையானவர்கள் என்று சொன்னால், மற்றவர்கள் திறமையற்றவர்கள் என்று அர்த்தமில்லை. அந்த அர்த்தத்திலே நான் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இந்த ஒன்றியத் தேர்தல்கள் முன்னாலேயே நடப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.